பவானி நகராட்சி

ஈரோடு மாவட்டம்

**ஏப்ரல்–2022 மாத நகர்மன்ற கூட்ட பொருட்கள்**

**நகர்மன்ற கூட்ட நாள் 28.04.2022**

**மன்றப் பொருட்கள்**

**பொருள்**

1) பவானி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தின் "B" பிரிவு அங்கீகாரம் வரும் 16.04.2022 இல் ஓராண்டு காலம் முடிவடைகிறது. எனவே, மேற்படி பேருந்து நிலையத்தின் அங்கீகாரத்தினை மேலும் ஓராண்டு காலத்திற்கு 17.04.2022 முதல் 16.04.2023 வரை புதுப்பிக்க வட்டார போக்குவரத்து அலுவலர், ஈரோடு அவர்களின் அங்கீகாரம் பெறுவதற்கான மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்: 281/2022/அ2)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

2) பவானி நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கிவரும் ஈப்பு வாகனம் எண் TN 36 AY 6791க்கு தற்போது நகர்மன்றத் தலைவர் அவர்களின் வாகனத்திற்கு குளிர்சாதனம் பொருத்தும் பணிக்கு 11.03.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது கீழ்க்கண்டவாறு விலைபுள்ளிகள் வரப் பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | சர்வ மங்களம் என்டர்பிரைசஸ் கோயம்புத்தூர் | 80597 |
| 2 | கிருஷ்ணா ஆட்டோ மொபைல்ஸ் கோயம்புத்தூர | 89929 |
| 3 | கிருஷ்ணா என்டர்பிரைசஸ் கோயம்புத்தூர் | 94269 |

வரப்பெற்ற மூன்று புள்ளிகளில் குறைந்த விலைப் புள்ளி தொகை ரூ.80597 கொடுத்துள்ள திருவாளர் சர்வமங்கலம் என்டர்பிரைசஸ் கோயம்புத்தூர் அவர்களின் விலைப்புள்ளி ஏற்று பணி மேற்கொண்டமை மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு**

1. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொண்ட மைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து திருவாளர் சர்வமங்களம் என்டர்பிரைசஸ் கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்:273/2022/E 1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

<u>பொருள்</u>

3) பவானி நகராட்சியின் 2021–2022 ஆம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி கணக்குகளுக்கு இயல்பு நிலை கணக்கு மற்றும் UTS மென்பொருள் மூலம் தயார் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட கணக்குகளை தனியாரை கொண்டு தயார் செய்யவும், அதற்கு ஆகும் செலவினம் ரூ.60,000/– (ரூபாய். அறுபதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) செலவினத் தொகை ரூ.60,000/–யை வருவாய் நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 482/2016/பி1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

<u>பொருள்</u>

4) பவானி நகராட்சி பொறியில் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகன எண் TN 36 AY 6793 வாகனத்தில் கிளட்ச் பிளேட், டிங்கரிங், வலதுபுற கண்ணாடி, முன்புற ரூம், சீட் கவர் சரிசெய்தல் மற்றும் சர்வீஸ் செய்தல் பணிக்கு M/s CAI Industries Pvt Ltd நிறுவனத்தின் மூலம் சரி செய்ய உத்தேச செவினத் தொகை ரூ.75,000/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) இதற்காகும் செவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3) அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர் நோக்கி M/s CAI Industries Pvt Ltd , Erode. நிறுவனத்திற்கு பழுதுகள் சரி செய்ய உத்தரவு வழங்கியமைக்கும், மேற்கண்ட நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கியமைக்கும் மன்றம் ஏற்கலாம்.

( ந.க.எண் 371/2022/E1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

<u>பொருள்</u>

5) இந்நகராட்சி வழக்கு எண் C.M.P.No : 16159/2019 in S.A.No : 1341/2001 தொடர்பாக அரசு வழக்கறிஞர் திரு. P.S.ஜெயகுமார் அவர்களுக்கு வழக்கு கட்டணம், நீதிமன்ற கட்டணம் மற்றும் இதரக்கட்டணங்கள் என மொத்தம் ரூ.42,000/– வழங்க தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்காலம்.

( ந.க.எண் 302/2022/எப் 1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

6) இந்நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்கு தேவையான 2022 – 2023–ம் ஆண்டிற்கு எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள், பாரங்கள் வாங்கிக் கொள்ளவும் அதற்காகும் வரவு, செலவு திட்டத்தின் கீழ் உத்தேச செலவினம் தொகை ரூ.15.00 (ரூபாய் பதினைத்து லட்சம்) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்403/2022/டி2)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

7) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண் 29280/2020/IT நாள் 31.03.2022ந் தேதிய கடித்த்தில் பவானி நகராட்சி மின் ஆளுமை இணைய தள மென்பொருள் சேவைக்கு (01.07.2021 முதல் 30.09.2021 மற்றும் 01.10.2021 முதல் 31.12.2021 முடிய) கட்டணம் ரூ.(48295+48295) தொகை ரூ.96590/–யை BSNL நிறுவனத்திற்கு ECS மூலமாக செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே BSNL நிறுவனத்திற்கு ரூ.96,590/– (ரூபாய் தொண்ணூற்றி ஆறாயிரத்து ஐநூற்றி தொண்ணூறு மட்டும்) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்73/2022/டி2)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

8) இந்நகராட்சிக்கு எதிராக திரு.V.K.S.R. அர்த்தனாசாமி (லேட்) என்பவரால் தொடரப்பட்ட வழக்கு, வழக்கு எண் C.M.P.No : 16159/2019 IN S.A.No : 1341/2001 – தொடர்பாக விசாரணை வருகின்ற 11.04.2022 அன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் வருவதால் இந்நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.P.S.ஜெயகுமார் அவர்கள் ஆஜராகும் பொருட்டு அதற்கான வழக்கு கட்டணம் ரூ.10,000/–(ரூபாய். பத்தாயிரம்) மட்டும் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்303/2022/எப்1)

**தீர்மானம்**
அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

9) 1. பவானி நகராட்சிக்கு சொந்தமான மீன் மார்கெட் வளாகத்தில் அமைந்துள்ள கடை எண் 1 குத்தகைதாரர் கே.மணியகாரன், என்பவர் இறந்து விட்டதால் கடை எண் 1னை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்து விட்டனர்.

2. புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண் 29 குத்தகைதாரர் திரு.பி.ஆர்.ரங்கசாமி, என்பவர் இறந்து விட்டதாலும், சரிவர வியாபாரம் ஆகாத காரணத்தினாலும் புதிய பேருந்து நிலைய கடை எண் 29னை நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டார்.

3. புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண் 16 குத்தகைதாரர் திரு.கே.சிவக்குமார், என்பவர் கொரானா காலத்தினால் கடை நடத்த ஏதுவாக சூழ்நிலை இல்லாத்ததால் நகராட்சி வசம் கடையை ஒப்படைப்பு செய்து விட்டார்.

4. பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண் 5 குத்தகைதாரர் திரு.நேரு ராஜேந்திரகுமார், என்பவர் தனக்கு பக்கவாத நோயால் சிரமப்படுவதால் தொடர்ந்து கடை நடத்த முடியாத சூழ் நிலையால் கடையினை நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டார்.

எனவே மேற்கண்ட நான்கு கடைகளை பொது ஏலத்தில் கொண்டு வர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்279/2022/A1)

**தீர்மானம்**
அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

10) பவானி நகராட்சியில் நகர்ப்புற சாதாரண உள்ளாட்சி தேர்தல் – 2022 புதியதாக நகர்மன்ற தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் நகர்மன்ற தலைவர் அவர்களின் அலுவலக பணிக்காக புதியதாக ஒரு கணினி மற்றும் பிரிண்டர் (Computer & Printer) வாங்க உத்தேச செலவினத் தொகை ரூ.1,00,000/– ஆகும்.மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரவும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்339/2022/E1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

11) பவானி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 11 தேவபுரம் குழந்தைகள் மையக்கட்டிடங்களுக்கு ரூ.2.00இலட்சம் மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்தல் பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் கடித ந.எண் 192/3/2021 நாள் 28.02.2022 தேதிய கடிதம் மூலம் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டு உள்ளது. அதன் பேரில் 05.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த்தாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | M/s சுந்தரம் ப்ராஜக்ட்ஸ், சென்னை | 0.17 % மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.S.பாலசுப்பிரமணியன், பவானி | 1.55 % மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.17 % சதவீதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s சுந்தரம் ப்ராஜக்ட்ஸ், சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2) மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்களின் நிர்வாக அனுமதியினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்264/2022/E1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

12) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் உள்ள அனைத்து வித இலகுர மற்றும் கனரக வாகனங்களுக்கும் அரசு விதிகளின் படி சாலைவரி, பசுமைவரி, தகுதிச்சான்று புதுப்பித்தல் கட்டணம்,சேவைக்கட்டணங்கள், புகை பரிசோதனை கட்டணம் மற்றும் காப்பீட்டு தொகை (Insurance), வாகனங்களுக்கு ஏற்படும்செலவினங்களை அவ்வப்போது நடைமுறையில் உள்ள முறைகள் மூலம் செலுத்தி பணி மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான செலவின விபரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| வாகனங்களுக்கான பேட்டரி வாங்குதல்<br>பசுமைவரி, புகை பரிசோதனை கட்டணம்,<br>சேவைக்கட்டணம், சாலைவரி செலுத்துதல்<br>(Online முறையில்)வாகனங்களுக்கான காப்பீட்டு<br>தொகை (Insurance) வாகனங்களுக்கு டயர் கொள்முதல்<br>இடைஇடையில் ஏற்படும் பழுது நீக்க செலவினங்கள,<br>ஸ்பேர் பார்ட்ஸ் மாற்றுதல் போன்ற செலவினங்கள் மேற்கொள்ள | ரூ.9,00,000 |

மேற்கண்டுள்ளவாறு 2022-2023 ஆண்டில் தேவைக்கேற்ப அவ்வப்போது விலைப்புள்ளி பெற்றோ, ஒப்பந்தப்புள்ளி மூலமாகவோபணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினங்கள் மேற்கொள்வதற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) வாகன டயர்கள் கொள்முதல்,பேட்டரி கொள்முதல் செய்தல் பணிகளுக்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த/விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள வேண்டி இருப்பின் குறைவான ஒப்பந்த/விலைப்புள்ளி வழங்கும் நிறுவனத்தினரிடம் பணி மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 862/2021/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

13) பவானி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் துப்புரவுப்பணி மேற்கொள்ளும் துாய்மை பணியாளர்களுக்கு 2022–2023ஆம் ஆண்டிற்கு தேவையான தளவாடச்சாமான்களை அவ்வப்போது தேவைக்கேற்ப வாங்கி வழங்கவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,00,000/–ற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1) ஒப்பந்தப்புள்ளி பெற்று தளவாடச்சாமான்களை வாங்கிக்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1267/2019/எச்1)

**தீர்மானம்**
அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

14) பவானி நகராட்சி பகுதிகளில் அவ்வப்பொது பெரிய மண் சாக்கடை தூர் வாருதல், முள்செடிகளை அப்புறப்படுத்துல்,உரக்கிடங்கில் குப்பைகளை சமன் செய்தல், உரமாக்கப்பட்ட மக்கும் கழிவுகளை லாரிகளை ஏற்றி அனுப்பும் பணி,ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி ஆகியவைகளை JCBஇயந்திரத்தை கொண்டு பணிமேற்கொள்ள வேண்டியுள்ளதால் 2022–2023–ம் ஆண்டில் அவ்வப்போது தேவைக்கேற்ப JCB வாகனத்தை பயன்படுத்தி பணி மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.9,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1) ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1628/2019/எச்1)

**தீர்மானம்**
அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

15) பவானி நகராட்சியில் பொது சுகாதாரபிரிவின் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு அரசு மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் துணை இயக்குநர், பொதுசுகாதாரப் பணிகள் அவர்களின் மூலமாக அறிமுகப்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்முறைகள் ஆகியவைகளை பொது மக்களுக்கு கொண்டு செல்லவும், செய்திதாளில் விளம்பரம் செய்யவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நகரில் அவ்வப்போது இதுசம்பந்தமான துண்டு பிரசுரங்கள் அச்சடித்து 2022–2023ம் ஆண்டில் தேவைக்கு ஏற்ப பொதுமக்களுக்கு விநியோகம் செய்யவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.2,00,000/- மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:–**

1. ஒப்பந்தப்புள்ளி பெற்று துண்டு பிரசுரங்கள் தயார் செய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 866/2021/எச்1)

**தீர்மானம்**
அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

16) பவானி நகராட்சியில் பொது சுகாதாரபிரிவில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு அரசு மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் துணை இயக்குநர், பொதுசுகாதாரப்பணிகள் அவர்களின் மூலமாக அறிமுகப்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்முறைகள் ஆகியவைகளை பொது மக்களுக்கு கொண்டு செல்லவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நகரில் அவ்வப்போது இதுசம்பந்தமான ஃபிளக்ஸ் போர்டுகள்

(Flex Board), போஸ்டர்கள் விழிப்புணர்வு ஆடியோ, வீடியோ, செலவினங்கள் பொன்ற இதர விளம்பர பணிகளை 2022–2023–ம் ஆண்டில் தேவைக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.2,00,000/-ற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:–**

1. ஒப்பந்தப்புள்ளி பெற்று மேற்படி பணிகள் செய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 311/2017/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள்</u>**

17) பவானி நகராட்சியில் பொது சுகாதாரபிரிவில் பணிபுரிந்து வரும் நிரந்தர, தற்காலிக, ஒப்பந்த துாய்மை பணியாளர்களுக்கு பணிகளின் போது பாதுகாப்புக்காக வழங்க வேண்டிய பணி பாதுகாப்பு உபரணங்களை (Safety Equipments) 2022–2023–ம் ஆண்டிற்காக வாங்கி கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 870/2021/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள்</u>**

18) பவானி நகராட்சியில் பணிபுரிந்து வரும் சீருடை பெற தகுதியான பணியாளர்கள் அனைவருக்கும் 2022–2023–ம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் தையற் கூலி அரசாணை (நிலை)எண்:168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை(பேரூ1) நாள்: 16.11.2015-ன் படி வழங்க வேணடியுள்ளது. சீருடைகளைஅரசு நிறுவனமான ஈரோடு வசந்தம் கோ ஆப்டெக்ஸ் நிறுவனத்தாரிடமிருந்து அந்நிறுவனத்தினரின் விலை விகிதத்தில் வாங்கிக்கொள்ளவும், அதற்குண்டான தையல்கூலி அரசாணையின் படி வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5,50,000–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 280/2020/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

19) பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த 2022-2023ஆம் நிதி ஆண்டில கொசுப்புழுக்கள் மற்றும் முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு தெளிக்கப்பட பயன்படுத்தப்படும் Temephos Emulsifiable 50% EC,Bacillus Thuringiensis Var Israelensis Aqueous Suspension Serotype H14அல்லதுBacillus Thuringiensis 5% WP மற்றும் Pyrethrum 2% Extract மற்றும் ஆகிய மருந்துகளை மேற்படி நிதியாண்டில் தேவைக்கேற்ப அவ்வப்போது தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினரிடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தில் 2022-2023-ஆம் நிதி ஆண்டில் அவ்வப்போது தேவைக்கேற்ப வாங்கிப் பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கும்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. பொது சுகாதாரப்பிரிவின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 872/2021/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

20) பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் மூலம் நகரின் சுகாதாரத்தை நல்ல முறையில் பராமரிக்க கிருமிநாசினி செய்யப்படும் பணிக்கு 2022-2023ஆம் நிதி ஆண்டில் தேவைப்படும் நீர்த்த சுண்ணாம்புத்தூள், பினாயில் மற்றும் பிளிச்சிங் பவுடர் கிரேடு-II,கருப்பு பினாயில், வெள்ளை பினாயில், கிளினிங் ஆசிட்,நீர்த்த சுண்ணாம்புத்தூள்

ஆகிய கிருமி நாசினிகளை மேற்படி நிதி ஆண்டில் தேவைக்கேற்ப வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி (Annual Tender) வாயிலாக அவ்வப்போது வாங்கிக் கொள்ளவும் அதற்கு ஆகும் தோராய செலவினம் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 873/2021/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

21) பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள வாகனங்கள், கொசுப்புகை மருந்து தெளிக்கும் புகைத்தெளிப்பான்கள், பூச்சிகளை கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்டு வரும் பவர் ஸ்பிரேயர்கள் போன்றவற்றிற்கு 2022-2023-ம் நிதியாண்டில் தேவைக்கேற்ப பெட்ரோல், டீசல், ஆயில் மற்றும் கிரீஸ் போன்றவைகள் வாங்கி பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ளவைகளை இந்துஸ்தான் பெட்ரோலியம்

கார்ப்பரேசன் நிறுவனத்தாரின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான M/s லட்சுமி பிரியா ஏஜென்ஸி(ADHOC), பவானி அவர்களிடமிருந்து வாங்கி பயன்படுத்தவும் அதற்கான ஆண்டு உத்தேச செலவினம் ரூ.30.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 163/2019/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

22) திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தினமும் இந்நகரில் சேகரிக்கப்படும் கழிவுகளில் மக்கும் கழிவுகள் நுண் உரம் கூடத்தில் உரமாக்கப்பட்டு வருகிறது. மக்காத உலர் கழிவுகள் தனியே சேகரித்து திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ல் தெரிவித்துள்ளபடி மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு அனுப்பி இறுதியாக்கம் (Final Disposal) செய்து அப்புறப்படுத்த தினமும் 27 வார்டுகளுக்கும் 50 கிலோ கொள்ளளவு கொண்ட கித்தான் சாக்குப்பைகள் தினமும் 60 முதல் 75 எண்ணிக்கை தேவைப்படுகிறது.

எனவே, 01.04.2022ஆம் தேதி முதல் 31.03.2023ஆம் தேதி வரை மேற்படி கித்தான் சாக்குப் பைகளை கொள்முதல் செய்து உபயோகப்படுத்தி உலர்கழிவுகளை சேகரித்து அனுப்பி வைக்கவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. இதற்கான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கும். இதற்கான செலவினம் ரூ.5,00,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்

(ந.க.எண். 289/2021/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

23) திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கென தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வீடு வீடாக குப்பைகளை தரம் பிரித்து சேகரிக்க பேட்டரியினால் இயங்கும் வாகனங்கள் (BOVs) 20 எண்ணிக்கை கடந்த 28.12.2018 ஆம் தேதியன்று புதியதாக வாங்கப்பட்டு நகரில் கழிவுகள் சேகரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வாகனங்கள் வாங்கப்பட்டு 4ஆண்டுகாலம் முடிவடைந்துவிட்டதால் அவ்வாகனங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே, 20 எண்ணிக்கை பேட்டரி வாகனங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.9,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1628/2019/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள்</u>**

24) பவானி நகராட்சி – பொது சுகாதாரம் – இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதார பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்: 101 (ந.நி.கு.வ.துறை), நாள்: 30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும். ஆனால், இந்நகராட்சியில் தற்போது 54 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வரும் நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2019, நாள்: 29.11.2019–ன் படி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இந்நகராட்சிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் 63 துப்புரவு பணியாளர்களை M/s Relyon Facility Services private Ltd, Chennai நிறுவனத்திடமிருந்து பெற்று துப்புரவு பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தற்போது 63 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு அப்பணியாளர்களை கொண்டு நல்லமுறையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களின் ஒப்பந்தப் பணிக்காலம் எதிர்வரும் 31.03.2022–ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் M/s Relyon Facility Services private Ltd, Chennai அவர்களின் கடிதத்தின் வாயிலாக 31.03.2022–ஆம் தேதியுடன் முடிகின்ற ஒப்பந்த பணியினை மேலும் 01.04.2022–ஆம் தேதி முதல் 30.04.2022–ஆம் தேதி வரையிலான காலத்திற்கு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2016, நாள்: 29.11.2019ல் குறிப்பிட்டுள்ள அதே நிபந்தனைகள் மற்றும் Terms and Conditions-க்கு உட்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.612/– என்னும் விலைவிகிதத்தில் தொடர்ந்து பணியாளர்களை வழங்கி பணி மேற்கொள்ள அனுமதிக்கும், மேற்படி சுகாதார பணிக்கான ஒப்பந்த காலத்தை 01.04.2022 முதல் 30.04.2022ஆம் தேதி வரை நீட்டிப்பு செய்து தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்ற அனுமதிக்கலாம்.
2. தலைவரின் முன் அனுமதி பெற்றுபணி மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்:2255/2015/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள்</u>**

25) பவானி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு சான்று பெறப்பட்டுள்ளது. நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக அறிவிக்க ஏதுவாகவும், பொது மக்களிடமிருந்து கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணைகள் தெரிவிக்க தமிழ் நாளிதழான கோவை மாலைமுரசில் வெளியீடு செய்வதற்கு ஆகும் செலவினம் ரூ.10,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்: 1638/2016/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள்</u>**

26) பவானி நகராட்சியில் நடைபெறும் ஒப்பந்த பணிகளை செய்வதற்கு கீழ்கண்ட ஒப்பந்தாரர்கள் இந்நகராட்சியில் ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்து தருமாறு விண்ணப்பம் செய்துள்ளார்கள். எனவே கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களை புதிய ஒப்பந்ததாராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | ஸ்ரீ பெரியாண்டிச்சிஅ ம்மன் கன்ஸ்ட்ரக்சன், 165 சத்தி- ஈரோடு ரோடு, அண்ணா நகர் (பழைய ரோடு), சலங்கபாளையம் (அஞ்சல்), பவானி , ஈரோடு மாவட்டம். |
| 2 | திருவாளர் S.A. சக்ரபாணி& சன்ஸ் , 611 மேட்டூர் ரோடு , பவானி |
| 3 | திரு. பி.பார்த்த சாரதி , இன்ஜீனியரிங் கன்ஸ்ட்ரக்சன் , No 11, 3வது குறுக்கு தெரு, அஸ்டலட்சுமி நகர் , சுந்தராபுரம் , கோயமுத்தூர். |
| 4 | திருவாளர் குருசாமி புராஜக்ட் , No : 4/11A செலம்ப கவுண்டன் பாளையம் , தொட்டிபாளையம் (அஞ்சல்), பவானி தாலூக்கா. |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 441/2022/இ1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

27) பவானி நகராட்சி புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு

1) VIP Special Type executive high back revolving chair – 1 எண்ணிக்கை

2) Teakwood conference Chair – 40 எண்ணிக்கைகள்

3) Executive table (Special type) size 72" X 36" X 30 and side unit 42" X 18 X 27 – 1 எண்ணிக்கை

போன்ற மரச்சாமான்கள் TANSI நிறுவனத்திடமிருந்து வாங்க உத்தேச செவினத் தொகை ரூ.3,50,000/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண் 482/2022/இ1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

28) இந்நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மான்யம் 2021–2022 திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 21191/2021/ அம்ரூர் – 2 நாள் 13.11.2021 வரப்பெற்றுள்ள கடிதத்தின் படி Tied Grant – 50% குடிநீர் பணிகளுக்கு 50% திடக்கழிவு மேலாண்மை சேர்த்து மொத்தம் 9 பணிகளும் தேர்வு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

நிர்வாக அனுமதி வழங்கிய 9 பணிகளில் ஒரு பணிக்கு ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி அலுவலக கட்டிடத்தின் முதல் தளத்தில் பொது சுகாதார பிரிவுக்கு இருப்பு அறை கட்ட நகர்மன்ற தீர்மான எண் 263 நாள் 31.12.2021–யில் அனுமதி பெறப்பட்டுள்ளதை ரத்து செய்து, பவானி நகராட்சி பகுதியில் அந்தியூர் – மேட்டூர் சந்திப்பில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடம். இந்த இடத்தை நகராட்சி பயன்பாட்டிற்கு கொண்டு வரும் நோக்கத்தோடு பொது சுகாதார பிரிவுக்கு இருப்பு அறை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே ஏற்கனவே நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கிய, நகராட்சி அலுவலக கட்டிடத்தின் முதல் தளத்தில் கட்டப்பட வேண்டிய பணியினை ரத்து செய்து திருத்திய நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1823/2021/இ1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

29) அரசாணை (நிலை ) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்:30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் ,சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022 ன்படி 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படி நாளிதழ் மற்றும் மாவட்ட நாளிதழில் விளம்பர அறிவிப்பு மாஸ்டர் பதிவேடு தயார் செய்தல் ,உரிய சொத்துவரி சுய மதிப்பீட்டு படிவங்கள் அச்சடித்தல், நகல் எடுத்தல் மற்றும் சிறப்பு அறிவிக்கை சொத்துவரி விதிப்பு தாரர்களுக்கு சார்வு செய்தல் மற்றும் இதர செலவினங்களை மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.5,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.423/2022/அ1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

30) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 27 வரை உள்ள அனைத்து பகுதிகளிலும் உள்ள நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மினி பவர் பம்புகள் மற்றும் கழிப்பிடங்களில் தண்ணீர் வசதிக்காக பொருத்தப்பட்டுள்ள ஏர்கம்பரஸ்சர் ஆகியவைகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்து பொது மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது.

எனவே 2022-2023-ம் நிதியாண்டிற்கு பாராமரிப்பு பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.503/2022/அ1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள்**

31) பவானி நகராட்சியில் தற்போது இரண்டு பழைய ஈப்பு வாகனம் மட்டுமே உள்ளது. புதிதாக தேர்தெடுக்கப்பட்டுள்ள நகர்மன்ற தலைவர், நகரின் அனைத்து பகுதிகளுக்கும் சென்று பொதுமக்களின் குறைகளை நேரில் அறியவும், நடைபெற்று வரும் திட்டபணிகள், பொதுப்பணிகளை ஆய்வு செய்யவும், குடிநீர் விநியோகம் சீராக செயல்பட ஏதுவாக தலைமை நீரேற்று நிலையம் சென்று வரவும், தெருவிளக்கு

பராமரிப்பு பணிகள் ஆகியவற்றினை நேரடியாக ஆய்வு செய்திடவும் வாகன வசதி தேவைப்படுகிறது.

எனவே புதிதாக தேர்தெடுக்கப்பட்ட நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு புதியதாக Mahindra Scorpio வாகனம் ரூ.16.00 இலட்சம் செலவினத்தில் நகராட்சி பொது நிதியிலிருந்து DGST (தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற விலையில்) விலை விகிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் உரிய அனுமதி பெற்று வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.502/2022/அ1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள்</u>**

32) பவானி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளில் உள்ள காவேரி குடிநீர் மற்றும் பிற பயன்பாட்டிற்கு பயன்படும் ஆழ்துளை கிணற்று நீர் ஆகியவைகளின் நீருந்த குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் வெடிப்புகள் மற்றும் கழிவுகளை உடனுக்குடன் சரி பார்த்து பொது மக்களுக்கு தங்குதடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்ய 2022–2033–ம் நிதியாண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதி 2022–2023ல் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.504/2022/அ1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது